


இந்தோனேஷியாவின் மக்கள் தொகை ஏறத்தாழ இருபது கோடி. (சிறு திருத்தம். தாழ இருக்க வாய்ப்பில்லை. ஏறிக்கொண்டுதான் இருக்கிறது.) இதில் கிட்டத்தட்ட தொண்ணூறு சதவிகிதம் பேர் முஸ்லிம்கள். மிச்சத்தில் ஹிந்துக்கள், பௌத்தர்கள், கிறிஸ்துவர்கள், ஆதி மலாய் இனக் குழுக்களைச் சேர்ந்தவர்கள் என்று கலந்துகட்டிய சமூகம். பதினேழாயிரத்து ஐந்நூறு குட்டித் தீவுகளை இழுத்துக்கட்டி இந்தோனேஷியா என்கிற அரசு சுதந்திரமாகச் செயல்படத் தொடங்கியது, 1945 ஆகஸ்ட் 17 முதல். முன்னதாக நெதர்லாந்திடம் அடிமைப்பட்டுக் கொண்டிருந்த தேசம் அது.

பெரும்பாலான இடங்களில் நிகழ்ந்தது போலவே, இந்தோனேஷியாவிலும் தொடக்க காலத்தில் மெஜாரிடி முஸ்லிம்கள் நிறைய அடிபட்டிருக்கிறார்கள். கொஞ்சநாள் அங்கே கிறிஸ்துவர்கள் கை ஓங்கியிருந்தது. பௌத்தர்கள் கொஞ்ச காலம். மதச்சார்பற்ற மன்னார்சாமிகள் கொஞ்ச நாள். எனவே, வெறுப்புற்ற முஸ்லிம்கள், வழக்கம்போல் ஆயுதமேந்தத் தொடங்கியது 1940-களின் தொடக்கத்தில்.

இந்தோனேஷியா சுதந்திரமடைந்தபோதே, அங்கே பல குட்டிப் போராளி இயக்கங்கள் தீவிரமாக இயங்க ஆரம்பித்துவிட்டன. சுதந்திர இந்தோனேஷியாவை ஒரு முழுமையான இஸ்லாமிய நாடாக, ஷரியத்தின் அடியொற்றிய சட்டங்களைக் கடைப்பிடிக்கும் தேசமாக ஆக்குவதே அவற்றின் லட்சியம். நாற்பதுகளின் தொடக்கத்தில் அங்கே தாருல் இஸ்லாம் என்கிற இயக்கம் மிகவும் பிரபலம். கர்டோஸுவிர்யோ (Kartosuwiryo) என்கிற அந்த ஊரின் அந்நாளைய சூப்பர் ஸ்டார் அரசியல்வாதியின் கண்காணிப்பில் வளர்க்கப்பட்ட இயக்கம் அது. நிறைய அடிதடிகள், கொலைகள் செய்திருக்கிறார்கள். பிறகு அறுபதுகளில் இந்த இயக்கத்தின் செயல்பாடுகள் ஓய்வு பெறத் தொடங்கி, மெல்ல மெல்ல அதிலிருந்து பல பேர் பிரிந்து போகத் தொடங்கினார்கள்.

அப்படிப் பிரிந்தவர்களில் இரண்டு பேர் சேர்ந்து தொடங்கிய இயக்கம்தான் ஜமா இஸ்லாமியா.

அபூபக்கர் பஷீர், அப்துல்லா சுங்கர் என்கிற அந்த இரண்டு நண்பர்களும், முதலில் பல்வேறு குட்டித் தீவிரவாத இயக்கங்களை ஒருங்கிணைத்து, ஒரு ஃபெடரேஷன் மாதிரி ஏதாவது செய்யமுடியுமா என்றுதான் முயற்சி செய்து பார்த்தார்கள். 1965-லிருந்து 1969 வரை நீடித்த இந்த முயற்சி, வேலைக்கு ஆகவில்லை. இயக்கங்கள் ஒத்துழைக்கவில்லை என்பது ஒரு பக்கம் இருக்க, 1967-ல் இந்தோனேஷியாவின் (முதல் அதிபர் சுகர்னோவை ஒரு குட்டி ராணுவப் புரட்சியின் மூலம் தூக்கியடித்துவிட்டு) இரண்டாவது அதிபராகப் பதவிக்கு வந்த ஹாஜி முஹம்மது சுஹர்தோ (Haji Mohammad Soeharto), தீவிரவாத இயக்கங்களுக்கு எதிராக மேற்கொண்ட மிகக் கடுமையான நடவடிக்கைகளும், அவரது கம்யூனிச எதிர்ப்பு கோஷங்கள் காரணமாகக் கிடைத்த அமெரிக்க ஆதரவும் உதவிகளும், அந்த அமெரிக்க சோவியத் பனிப்போர் காலகட்டத்தில் இந்தோனேஷியாவின் முஸ்லிம் இயக்கங்களுக்குப் பெரிய இடைஞ்சலாக இருந்தன. அவர்களால் ஒன்றுசேர முடியவில்லை.

எனவே, அபூபக்கர் பஷீரும் அப்துல்லா சுங்கரும் தனியொரு இயக்கத்தைத் தொடங்குவது தவிர, தங்களுக்கு வேறு வழியில்லை என்று முடிவு செய்தார்கள். புதிய, வலுவானதொரு எதிர்ப்பு இயக்கத்தின் தோற்றத்துக்கும் செயல்பாட்டுக்கும் இந்தோனேஷியாவின் அரசியல் சூழ்நிலையில் கட்டாயமாக ஒரு தேவை இருப்பதாக அவர்கள் நம்பினார்கள். முன்னாள் ராணுவ ஜெனரல் சுஹர்தோ. அவரும் ஒரு முஸ்லிம்தான். அதிபரானதில் தவறில்லை. ஆனாலும் அமெரிக்க அடிவருடியாக அல்லவா இருக்கிறார்? ஒரு யோக்கியமான முஸ்லிம் எப்படி அமெரிக்க ஆதரவாளராக இருக்கமுடியும்? இஸ்ரேலுடன் கூட்டணி வைத்து, பாலஸ்தீனில் எத்தனை அட்டூழியம் செய்கிறார்கள்? மத்தியக் கிழக்கையே இரண்டாகப் பிளக்க அல்லவா பார்க்கிறார்கள்? தவிரவும் ஆப்கனிஸ்தானைப் பகடைக்காயாகப் பயன்படுத்தி, ஆசியாவில் மாபெரும் அபாயகரமான விளையாட்டொன்றை அரங்கேற்ற நினைக்கிறார்கள்.

அவர்களுக்கு அடுக்கடுக்கான காரணங்கள் இருந்தன. முக்கியமான காரணம், இந்தோனேஷியாவை விடுவிப்பது. சுஹர்தோவிடமிருந்து மட்டுமல்ல. வலது – இடது சாரி அபாயங்களிடமிருந்து. ஒரு பரிபூரண இஸ்லாமிய தேசமாக அது ஆகவேண்டும். ஷரியத் ஒன்றுதான் சட்டமாக இருக்கவேண்டும். அந்நியர்களுக்கு இடமில்லை. அமெரிக்கர்களுக்கு அறவே இல்லை.

ஆகவே, அவர்கள் ஜமா இஸ்லாமியாவைத் தொடங்கினார்கள்.

அபூபக்கர் பஷீர் ஓர் அரை இன்ஜினீயர். ஆனால், முழுப் போராளி. இயக்கம் தொடங்குவது என்று முடிவு செய்ததுமே அவர் முதலில் ஒரு ரகசிய ரேடியோ ஒலிபரப்பை ஆரம்பித்தார். இந்தோனேஷியாவின் வளர்ச்சி பெறாத கிராமப்புறங்களிலும், காட்டுப்பகுதிகளில் வசிக்கும் ஆதிவாசிக் குழுவினர்களுக்கும் அரசியல் சொல்லித் தருவதற்கென்று தொடங்கப்பட்ட ரேடியோ அது. அபூபக்கர் பஷீர், அப்துல்லா சுங்கர் இருவரும் தேசம் முழுவதும் பல கிராமங்களுக்குத் தமது நண்பர்களுடன் பயணம் செய்து, தங்கள் செலவிலேயே ரேடியோ பெட்டிகளை வாங்கிக் கொடுத்தார்கள். 'ஆஹா' இது செம ஹாட்டு என்று அவர்கள் விளம்பரம் செய்யவில்லை. ஆனால், அந்த ரேடியோ நிகழ்ச்சிகள் உண்மையிலேயே மிகவும் சூடாகத்தான் இருந்தன.

இந்த ரகசிய ரேடியோ ஒலிபரப்பைத் தொடங்கியவுடன் ஜாவாவில் ஒரு போர்டிங் பள்ளிக்கூடத்தையும் அவர்கள் தொடங்கினார்கள். ஏழை எளியவர்கள் தம் குழந்தைகளைக் கொண்டுவந்து சேர்க்கலாம். கல்விக்கட்டணம் கிடையாது. கல்வியும் கிடைக்கும். உணவும் கிடைக்கும். ஆனால், கண்டிப்பாக ஆங்கிலக் கல்வி கிடையாது. இஸ்லாமியக் கல்விதான். இறைவனுக்காக உயிர் துறப்பதுதான் மிகப்பெரிய லட்சியம். அந்த லட்சியத்தை அடைவதற்கு இந்தப் பள்ளிக்கூடம் வழி சொல்லிக்கொடுக்கும் என்று பகிரங்கமாக போர்டு வைத்து ஆரம்பித்தார்கள்.

பாகிஸ்தான், ஆப்கனிஸ்தான் போன்ற தேசங்களில் அந்நாளில் இயங்கிக்கொண்டிருந்த மதரஸாக்களுக்கும் இந்த போர்டிங் மதரஸாவுக்கும் அடிப்படையில் ஒரு வித்தியாசம் இருந்தது. இந்தப் பள்ளிக்கூடத்தில் மாணவர்களுக்கு ஆயுதம் ஏந்தவோ, போரிடவோ அவர்கள் பயிற்சியளிக்கவே இல்லை. அது அவசியமில்லை என்று அபூபக்கர் பஷீர் நினைத்தார். நாம் சொல்லித்தர வேண்டியது கல்வி. ஏற்படுத்த வேண்டியது விழிப்புணர்வு. ஆயுதம்தான் தீர்வு என்று அவர்களுக்குத் தோன்றினால், அவர்களே அந்த வழிக்குப் போவார்கள். அரசியல் தீர்வு சாத்தியம் என்று நினைப்பார்களேயானால், அதுவும் சம்மதமே. நாம் கட்டாயப்படுத்த வேண்டாம் என்று சொல்லிவிட்டார். கல்வியில் மட்டும் குறை இருக்கக் கூடாது என்பது கண்டிப்பான உத்தரவு. மதப்பாடங்களுடன் சில கைத்தொழில்களையும் அங்கே சொல்லிக்கொடுத்தார்கள்.

ஆனால், ஜமா இஸ்லாமியாவுக்கு வேறு விதங்களில் ஆள் தேடும் படலம் தொடர்ந்தது. நண்பர்கள் இருவரும் நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து சொற்பொழிவுகள் நடத்தினார்கள். பழைய போராளி இயக்கங்களிலிருந்து பலபேரை பேசிப் பேசிச் சேகரித்தார்கள். அவர்கள்

மூலமாக இன்னும் பலபேரை வரவழைத்தார்கள். படித்து, வேலை இல்லாமல் சுற்றிக் கொண்டிருந்த இளைஞர்களைத் தம் பக்கம் ஈர்ப்பதில் அதிக அக்கறை செலுத்தினார்கள்.

என்ன செய்யப்போகிறோம்?

முதலாவது, இந்தோனேஷியாவை அமெரிக்க அடிவருடிகளிடமிருந்து விடுவிப்பது. பரிபூரண இஸ்லாமிய தேசமாக்குவது. இரண்டாவது, கேலிக்கூத்தாக இருக்கும் அரசியல் கட்சிகளை ஒழித்துக்கட்டி, பண்டைய கலீபாக்களின் ஆட்சியை அடியொற்றிய நவீனகால முடியாட்சியை அமைப்பது. மைனாரிடிகள் அவ்வப்போது துள்ளித் திரிவதை ஒடுக்குவது.

அவர்களுக்கு அதிகம் எரிச்சலூட்டிக் கொண்டிருந்தது, இந்தோனேஷியாவில் அந்தக் காலகட்டத்தில் ஊடுருவிக்கொண்டிருந்த அமெரிக்கத் தாக்கம். வாழ்க்கை முறையிலும் ஆட்சி முறையிலும் பொருளாதாரச் சீர்திருத்தங்களிலும் மற்றவற்றிலும் சுஹர்தோ அப்படியே அமெரிக்க பாணியைப் பின்பற்றக்கூடியவராக இருந்தார். நிறைய அமெரிக்க நிறுவனங்கள் அங்கே வந்து கடைவிரிக்கத் தொடங்கியிருந்தன. நைட் க்ளப்புகளும் பார்களும் பிற உல்லாசக் கேந்திரங்களும் இரவெல்லாம் ஜொலித்தன. சுற்றுலாப் பயணிகளின் சொர்க்கம் என்று கருதத்தக்க பல தீவுகள் இருந்தபடியால், மேற்கத்திய பாணியில் பல நட்சத்திர ஓட்டல்கள் திறக்கப்பட்டு, களியாட்டங்கள் அரங்கேறிக் கொண்டிருந்தன. மண் வாசனை என்று ஒன்று உண்டா என்று கேட்கக்கூடிய அளவில்தான் பாரம்பரியத்துக்கு மரியாதை இருந்தது.

இதெல்லாம் அடிப்படைவாத மனோபாவம் கொண்டவர்களால் சகிக்க முடியாதது அல்லவா? எனவே, ஒழித்துவிட வேண்டுமென்று முடிவு செய்தார்கள். மெல்ல மெல்ல இயக்கத்தின் செயல்பாடுகள் ஆரம்பமாயின.

1969-ல் தொடங்கப்பட்ட ஜமா இஸ்லாமியா, முதலில் வீதிக் கலவரங்கள் மூலம்தான் அறிமுகமானது. ஏதாவது ஓர் அரசாங்க முடிவுக்குத் தங்கள் எதிர்ப்பைத் தெரிவிக்க விரும்பினால், திடீரென்று நான்கு வீதிகள் கூடுமிடத்தில் ஜமா சேருவார்கள். சில கற்கள் பறக்கும். அல்லது ஒரு பெட்ரோல் குண்டு பாயும். நாலு கடைகளின் ஷட்டர்கள் இழுத்து மூடப்படும்.

அத்துடன், திருப்தி கொண்டு போய்விடுவார்கள். எழுபதுகளின் இறுதியில்தான் முதன்முதலில் அவர்களுக்குத் தடையில்லாமல் வெடிபொருள்கள் கிடைக்கத் தொடங்கின.

அப்போதெல்லாம் இந்தோனேஷியாவில் யாருக்கும் வெடிகுண்டு தயாரிக்கத் தெரியாது. அதெல்லாம் ஆப்கனிஸ்தான் அல்லது பாகிஸ்தானிலிருந்து தருவிக்கப்படும் வஸ்துவாகவே இருந்தது. சில ஆதிவாசிக் குழுவினரின் மத்தியில் நாட்டு வெடிகுண்டுகள் புழக்கத்தில் இருந்தன. அதிகம் வீரியமில்லாத குண்டுகள். ஒரு சுவரில் வீசினால் ஓட்டை போடும் அளவே வல்லமை மிக்க குண்டுகள். அதைக் கொண்டுதான் குட்டிக் கலவரங்களில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார்கள். செய்ய நினைக்கிற மாபெரும் புரட்சிக்கு இந்த வெங்காய வெடிகளெல்லாம் போதாது என்று அபூபக்கர் பஷீரும் அப்துல்லா சுங்கரும் நினைத்தார்கள்.

ஒன்று, சுயமாக ஆயுதம் தயாரிக்கக் கற்பது. அல்லது தடையில்லாமல் தருவிக்க வழி தேடுவது. இரண்டில் ஒன்று உடனே செய்ய வேண்டிய காரியம். இந்த யோசனையில் அவர்கள் தீவிரமாக இருந்தபோதுதான் சுஹர்தோ அவர்களைக் குறிவைத்தார்.

சுஹர்தோ பதவிக்கு வந்த முதல் நாளிலிருந்தே, போராளி இயக்கங்களை ஒடுக்குவதில் மிகத் தீவிரமாக இருந்தார். தன் ஆட்சிக்கு யாரிடமிருந்து எந்தெந்த வகைகளில் ஆபத்து வரும் என்று அவர் ஒரு சர்வே எடுத்திருந்தார். கம்யூனிஸ்டுகள், போராளிக் குழுக்கள், பண்ணையார்கள் என்று ரிசல்ட் வந்திருந்தது. எனவே, இந்த மூன்று தரப்பினரையும் ஒழித்துக்கட்டுவதைத் தன் முதல் செயல்திட்டமாக அவர் வைத்துக்கொண்டிருந்தார்.

ஜமா இஸ்லாமியாவுக்கு முன்னால், இந்தோனேஷியாவில் இயங்கிக்கொண்டிருந்த இயக்கங்கள் அனைத்தையும் பெரும்பாலும் அழித்துவிட்ட சுஹர்தோ, அபூபக்கர் பஷீரையும் அவரது ஆதரவாளர்களையும் குறிவைத்தபோது, அவர்கள் இருவரும் இந்தோனேஷியாவில் கணிசமான ஆள் பலமும் ஓரளவு நல்ல பெயரும் பொருளாதார பலமும் கொண்டவர்களாக உருப்பெற்றிருந்தார்கள்.

ஆயுதம்தான் அவர்களுக்குப் பெரிய பிரச்னையாக இருந்தது. கைவசம் நவீன ஆயுதங்கள் என்று எதுவுமே இல்லை. எல்லாம் நாட்டுச் சரக்குகள். திருப்தி கொள்ளுமளவுக்கு நல்ல ஆயுதங்கள் தமக்குக் கிடைக்குமா என்று அவர்கள் தேசத்துக்கு உள்ளேயும் வெளியேயும் தேடத் தொடங்கியபோதுதான் ஜமா இஸ்லாமியாவினர், மிக எளிதாக ராணுவத்தினரிடம் அகப்பட்டுக்கொள்ள ஆரம்பித்தார்கள். காரணமே தெரியாமல் பலபேர் தினசரி காணாமல் போகத் தொடங்கினார்கள். ஒரு நல்ல நாளில் அபூபக்கர் பஷீரையும் அப்துல்லா சுங்கரையும் கூடப் பிடித்துவிட்டார்கள்.

ஆயுத வேட்டையில் இறங்கியிருந்தார்கள் என்கிற காரணத்தையே அவர்கள் வெளியே சொல்லவில்லை. பஷீரின் போர்டிங் பள்ளியில், இந்தோனேஷியக் கொடிக்கு வணக்கம் செலுத்துவதில்லை, தனியே தன்னிஷ்டத்துக்கு ஷரியத் நீதிமன்றம் (கட்டப் பஞ்சாயத்து என்றும் சொல்லலாம்) நடத்துகிறார் என்றெல்லாம் காரணங்கள் சொல்லிக் கைது செய்தார்கள்.

ஜமா இஸ்லாமியாவினருக்கு அப்போது எப்படித் தப்பிப்பது என்று தெரியவில்லை. நிறைய இழப்புகள், கிட்டத்தட்ட இயக்கமே உருக்குலைந்துவிடும் போலிருந்தது நிலைமை. தங்கள் தலைவர்களை எங்கே சிறை வைத்திருக்கிறார்கள் என்பதைக் கண்டுபிடிக்கவே அவர்களுக்குப் பலகாலம் தேவைப்பட்டது.

இதற்குமேல் ஒன்றுமில்லை; எல்லாம் முடிந்துவிட்டது என்றுதான் எல்லோரும் நினைத்தார்கள். மறந்தும் போனார்கள். ஆனால், பஷீர் விழிப்புடன் இருந்தார். தக்க தருணத்துக்காகக் காத்திருந்து, யாரும் எதிர்பாராத ஒரு சந்தர்ப்பத்தில், 1982-ம் ஆண்டு மலேசியாவுக்குத் தப்பிச் சென்றார்.

ஜமா இஸ்லாமியாவுக்கான புதிய ஜமா அப்போது சேர ஆரம்பித்தது.